# WORD OF CHRIST
# (கிறிஸ்துவின் வசனம்)

கொலோ 3:16

ஆசிரியர்
சகோ. அர்ச்சுனன்

11 கொரி 3:6

பிப்ரவரி
1993

வாசகர்களுக்கு,

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்கு கிருபையும், சமாதானமும் உண்டாவதாக!

இந்த ஏழாவது இதழ் மூலம் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். ஒவ்வொரு மாதமும் வெளியிடப்படும் இவ்விதழை நீங்கள் படித்து ஆவிக்குரிய வளர்ச்சியடையும் படியாகவும், வேத சத்தியங்களையும், தேவ சித்தங்களையும் தெரிந்து கொள்ளும்படியாகவும் இந்த கடைசி நாட்களில் கிறிஸ்துவின் உபதேசங்களுக்கு கீழ்படிந்து நடக்கும்படியாகவும் தொடர்ந்து இவ்விதழை வெளியிடுகிறேன். படித்து ஆண்டவரின் வசனங் களுக்கு கீழ்படிந்து கர்த்தருக்குள் வளருவீர்களாக

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபை நம் அனைவரோடுங் கூட இருப்பதாக! ஆமென்!!

ஆசிரியர்

## GOOD SHEPHERD
### (நல்ல மேய்ப்பன்)

இச்செய்தியை வாசிக்கும் என்தருமை சகோதரனே சகோதரியே ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய வாழ்க்கைக்கு ஒரு நல்ல மேய்ப்பராகயிருக்கின்றார். நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக தன் ஜீவனை கொடுக்கிறான் (யோவா: 10 : 11) என்றபடி கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நம் அனைவரையும் மீட்கும் பொருட்டு தமது ஜீவனையே நமக்காக கொடுத்தார். நீங்கள் அவருக்காக என்ன செய்யப்போகிறீர்கள். இன்றே அவரிடம் உங்களை ஒப்புக் கொடுங்கள்.

நானே வாசல் என் வழியாய் ஒருவன் உட்பிறவேசித்தால் அவன் இரட்சிக்கப்படுவான் அவன் உள்ளும் புறம்பும் சென்று மேய்ச்சலைக் கண்டடைவான் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து யோவான் 10:9-ல் சொல்கிறார் ஆம் பிரியமான தேவ பிள்ளையே நீங்கள் இயேசுகிறிஸ்துவின் வழியே உட்பிரவேசித்தால்

காப்பாற்றப்படுவீர்கள் மேலும் நல்ல ஒரு வாழ்க்கையை நீங்கள் வாழ முடியும் கர்த்தர் உங்கள் தேவைகளை சந்தித்து வழி நடத்துவார்.

சங்கீதக்காரனாகிய தாவீது சொன்னது போல அவர் என்னை புல்லுள்ள இடங்களில் மேய்த்து அமர்ந்த தண்ணீர் அன்டையில் என்னைக் கொண்டுபோய் விடுகிறார் சங் 23:2 அமர்ந்த தண்ணீர்கள் அன்டையில் என்னை கொண்டுபோய் விடுகிறார் என்று சொல்வதை கவனியுங்கள் ஒரு காட்டாறு ஓடும் இடத்தில் ஆடுகளை வழி நடத்தினால் ஆடுகள் சிதரடிக்கப்படும் அல்லது காட்டாறு அடித்து செல்லப்படும் ஆனால் ஆண்டவர் நம்மை அமர்ந்த தண்ணீர்களன்டையில் வழி நடத்துகிறார் ஆம் நண்பனே உன்னை சரியானபடி வழி நடத்துவான். நீங்கள் முதலாவது அவருக்கு செவி கொடுக்க வேண்டும். என் ஆடுகள் என் சத்தத்திற்குச் செவிகொடுக்கிறது நான் அவைகளை அறிந்திருக்கிறேன் அவைகள் எனக்குப்பின் செல்லுகிறது யோவா 10:27-ல் சொல்கின்றார்.

நானே நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்கிறேன். மேய்ப்பனாயிராதவனும். ஆடுகள் தனக்குச் சொந்தமல்லாதவனுமான கூலியாள் ஒநாய் வருகிறதைக் கண்டு ஆடுகளை விட்டு ஓடிப்போகிறான் ஆடுகளுக்காக அவன் கவலைப்படான் யோவா 10:11-13 ஆனால் ஆண்டவராகிய இயேசுகிறிஸ்து நமக்காக தமது ஜீவனையே கொடுத்தார் நம்முடைய மீறுதல்கள் நிமித்தம் அவர் பாடுபட்டார். என் பிரியமான தேவ பிள்ளையே நமக்கு என்ன கஷ்டங்கள் வந்தாலும், கவலைகலும் உபத்திரங்களும் வந்தாலும், வேதனைகள் வந்தாலும் எல்லாவற்றிலும் விடுதலையாக்கி நம்மை வழிநடத்த வல்லவராயிருக்கிறார் இப்படிப்பட்ட ஒரு நல்ல மேய்ப்பன் நமக்கு இருக்கும் போது நாம் ஏன் கவலைப்பட வேண்டும், கர்த்தர் உங்களை வழிநடத்து வாராக

ஆமென்

## ★ சபை செய்திகள்:

சென்ற மாதம் 17-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை காலையில் 5 சகோதரிகளும் ஒரு சகோதரரும் கிறிஸ்துவுக்கு கீழ்படிந்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார். இவர்களுக்கு சகோ. பாக்கியநாதன் மதுரை அவர்கள் ஞானஸ்நானம் கொடுத்தார். மேலும் குடும்பத்துடன் வந்து கலந்து கொண்டு தேவ செய்தியும் கொடுத்தார்.

இம் மாதம் 27-ந் தேதி சனிக்கிழமை மாலை 5-00 மணிக்கு கர்த்தருக்கு சித்தமானால் சுவிசேஷ கூட்டம் வத்தலக்குண்டில் மார்னிங் ஸ்டார் ஆங்கிலப்பள்ளி, கணவாய்பட்டி ரோடு, தண்ணீர் தொட்டி சமீபம் உள்ள பள்ளியில் நடைபெறும் பங்கு பெற்று பயன் பெறுங்கள்

## ★ பரிசு:

ஜனவரி மாத இதழின் வேத அறிவுப் போட்டியில் பரிசு பெறுபவர்கள்:

1. N. தமிழ்வாணன் - அம்பிளிக்கை
2. S. அமுதமணி - மேல்விசாரம்

## ★ சென்ற இதழின் விடைகள்:

1. குமாரன் மூலமாய் எபி 1:2
2. இயேசு கிறிஸ்து அப் 9:34
3. யோனா யோனா 1:17
4. தோட்டக்காரன் லூக் 13:8
5. கிறிஸ்துவின் சபையை மத் 16:18
6. தேவனாகிய கர்த்தருக்கே
7. இல்லை
8. மோசே
9. எலிசா
10. விக்கிரகங்களுக்கு

## ★ இம்மாத வேத அறிவுப்போட்டி:

1. எது உங்களை விடுதலையாக்கும் என்று இயேசு சொன்னார்?
2. தேவன் வீண் வார்த்தைகளுக்கு என்ன செய்வார்?
3. மரணத்துக்கு குறிக்கப்பட்டவர்கள் போல தேவன் யாரை கடைசியானவர்களாய் காணப்படப் பண்ணினார்?
4. என் வாயினின்று வாந்தி பண்ணிப்போடுவேன் என்று எந்த சபையை பார்த்து சொன்னார்?
5. உண்மையாய் நடக்கிறவர்களோ யாருக்கு பிரியம்?
6. நல்ல மேய்ப்பன் ஆடுகளுக்காக எதை கொடுக்கிறார்?
7. முன்நூறு நரிகளை பிடித்தவன் யார்?
8. தேவனை தரிசிக் முடியுமா?
9. வசனங்கள் எப்படி இருக்கிறது?
10. நியாயப்பிரமாணத்திற்கு நாம கீழானவர்களா?

முதல் ஐந்திற்கு வேத ஆதாரத்துடனும், கடை ஐந்திற்கு விடை மட்டும் கீழ்க்காணும் முகவரிக்கு ஒரு போஸ்ட்கார்டில் எழுதி இம்மாத இறுதிக்குள் எமக்கு வந்து சேரும்படி அனுப்பவும் சரியான விடை எழுதுபவருக்கு பரிசு அனுப்பப்படும்.

## ★ கலந்து கொண்டு பயன் பெறுங்கள்:

கர்த்தருக்கு சித்தமானால் இம் மாதம் 14, 15 & 16 தேதிகளில் கிறிஸ்துவின் சபை 13,சாய்நகர் சென்னை 600082ல் 11th Annual Lectureship கூட்டம் நடைபெறும் அனுமதி இலவசம் கலந்து கொண்டுபயன் பெறுங்கள்.

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**Bro. SOLOMON**
Co-ordinator
The National Bible College
13, Sai Nagar Madras-82.

If undelivered please return to:
**THE EDITOR**
**Word of Christ, Post Box No. 5**
**BATLAGUNDU. 624 202 Anna Dt.**

**For Private Criculation only.**

Published by Batlagundu church of Christ and
Printed at Shanthi Press Batiagundu-624 202.